RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22131

# ஜீவகுமாரன் சிறுகதைகளில் காதல்

க. பன்னீர்செல்வம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638009, இந்தியா

# Love in Jeevakumaran's short stories

K. Panneerselvam [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638009, India

* Corresponding Author:
ka.panneer73@gmail.com

Received: 02-11-2021
Revised: 07-01-2022
Accepted: 13-01-2022
Published: 30-01-2022

Check for updates

**ABSTRACT**

Love is the reason why the world is alive. Animals, birds and all living beings are filled with love. It is not possible to avoid love and bring this world into the imagination. Love stirs everyone to the point of saying that there are no poets who do not sing about love, and there are no creators who do not write about it. Every creator writes this love according to his opinion or on the basis of recording the reality as it is. Thus, this article seeks to explore what accounts of love have been given in his works by V. Jeevakumaran of Denmark.

**Keywords:** Jeevakumaran, Love, Short stories, Sri Lanka

## முன்னுரை

உலகம் உயிர்ப்புடன் விளங்குவதற்குக் காரணமே காதல்தான். விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிர்களிலும் காதல் நிரம்பி உள்ளது. காதலைத் தவிர்த்துவிட்டு இந்த உலகத்தை கற்பனைக்குள் கொண்டுவர முடியாது. காதலைக் குறித்துப் பாடாத கவிஞர்கள் இல்லை, எழுதாத படைப்பாளர்கள் இல்லை என்று சொல்லும் அளவுக்குக் காதல் எல்லோரையும் ஆட்டிப் படைக்கிறது. இந்தக் காதலை ஒவ்வொரு படைப்பாளரும் தங்களது கருத்துக்கேற்றவாறோ அல்லது எதார்த்தத்தை அப்படியே பதிவு செய்வது என்ற அடிப்படையிலோ எழுதி வருகிறார்கள். அவ்வகையில் டென்மார்க் வி.ஜீவகுமாரன் தமது படைப்புகளில் காதல் குறித்து எவ்வாறான பதிவுகளைத் தந்துள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

## காதல் பலவகை

காதலை எல்லோரும் விரும்பினாலும் சிலர் சில நேரங்களில் ஏற்றுக் கொள்வதும் சிலர் சில நேரங்களில் எதிர்ப்பதும் என மேடும் பள்ளமும் போல இருந்து வருகின்றனர். ஏற்பது இயல்பான ஒன்றாகவும் எதிர்ப்பது எல்லைமீறிப் போவதாகவும் இருக்கிறது. டென்மார்க் வி.ஜீவகுமாரனின் நிர்வாண மனிதர்கள் என்னும் சிறுகதைத் தொகுப்பில் பலவகை நிலைப்பாட்டையும் காணமுடிகிறது. கதைக்கான, காதலுக்கான களங்கள் யாவும் புலம்பெயர்ந்த நாடுகளாகவே உள்ளன (Jeevakumaaran, 2014).

## ஏற்புக்குரிய காதல்

'தவம்;' என்னும் சிறுகதையில் பெற்றோர் தங்கள் மகள் ரேணுகாவிற்குத் திருமணம் செய்து வைக்க மாப்பிள்ளை பார்க்கின்றனர். ஆனால் எந்தவொரு மாப்பிள்ளையும் பொருந்தி வரவில்லையே

என யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது ரேணுகாவே தனக்குப் பிடித்தவன் பெயரைக் கூறுகிறாள். 'படிப்புக்கு ஏற்ற மாதிரி மாப்பிள்ளை... தொழிலுக்கு ஏற்ற மாப்பிள்ளை... வடிவுக்கு ஏற்ற மாப்பிள்ளை... வயதுக்கு ஏற்ற மாப்பிள்ளை என எல்லா விதத்திலும் பார்த்துக் கொண்டு போக ஏதோ ஒன்றில் ஏதோ ஒன்று சறுக்கிக் கொண்டு போக... அவளாகச் சொன்னதுதான், 'கோபியைக் கேட்டுப் பாருங்களேன்' என்று' இவ்வாறு மகள் சொன்னதும், பெற்றோர் அதிர்ச்சி அடையவில்லை. கோபம் கொள்ளவில்லை. மகளை வார்த்தைகளால் துளைத்தெடுக்கவில்லை. அடித்து உதைக்கவில்லை. ஆணவக் கொலை புரிய சதித்திட்டம் தீட்டவில்லை. மாறாக ரேணுகாவின் தந்தை 'இதனை முதலிலேயே சொல்லியிருக்கலாமே, என்று விட்டு என் பழைய டைரியைத் தேடி தேவராஜா அண்ணையின் தொலைபேசி எண்ணைக் கண்டுபிடித்தேன்' (பக்-16) என்பதாக மகளின் விருப்பத்தை ஏற்கொள்ளக் கூடிய தந்தையாகக் காணமுடிகிறது (Jeevakumaaran, 2018).

ஒரு தந்தையாக மட்டும் அல்லாது ஒரு நண்பனைப் போலவும் அவர் செயல்படுவதைக் காணமுடிகிறது. மகள் தனது விருப்பத்தைச் சொல்வதற்குப் பயமோ, தயக்கமோ, நடுக்கமோ இல்லாமல் ஒரு நண்பனிடத்தில் கூறுவதைப் போல மிக இயல்பாகக் கூறுவதற்குரிய உரிமையை வழங்கியிருப்பது மிக அழகாக உள்ளது. 'இலங்கை சென்ற பொழுது கோபியின் மேல் இருந்தது வெறுமனே ஈர்ப்பு என்றுதான் எண்ணியிருந்ததாயும்... ஆனால், அதன்பின் கோபியுடன் நன்கு பழகும் வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை என்றும்... இப்போது திருமணங்கள் வந்து... வந்து... தட்டி... தட்டிக் கழிந்து கொண்டு போகும் பொழுது, தான் கோபியை நினைத்துப் பார்ப்பதாயும் அவள் சொன்னாள்' (பக்-16) எனத் தனது மகளின் உளப்பாட்டை தெரிந்து கொள்ளும் தந்தையாகவும் அவர் விளங்குகிறார்.

ரேணுகா தனது உள்ளத்துக்குள் அவளையும் அறியாமல் ஒளிந்து கிடந்த காதலை வெளிப்படுவதற்குரிய சூழல் உருவானதற்குக் காரணம் அவளுடைய தந்தை அவளுக்கு வழங்கிய அன்பும் உரிமையும்தான் காதலை ஏற்றுக் கொள்வதற்கான காரணமாக உள்ளதைக் காணமுடிகிறது. இச்சூழலில் கோபியின் பெற்றோரின் விருப்பத்தை அறிந்துகொண்டு பிறகு மாப்பிள்ளையாகப் பேசி முடிக்க, கோபியின் வீட்டிற்குச் சென்ற பொழுது துயராமான செய்தியை ரேணுகா மற்றும் ரேணுகாவின் பெற்றோர் அறிகிறார்கள்.

ரேணுகாவின் காதலன் கோபி போராளிகளிடையே சிக்கிக் கொள்கிறான். அவனை விடுவிக்க வேண்டுமென்றால் 13 ஆயிரம் யூரோக்கள் கொடுக்க வேண்டும் என்று நியந்தனை விதிக்க, கோபியின் பெற்றோரும் எப்படியோ சிரமமப்பட்டு பத்தாயிரம் யூரோக்களை கொடுத்தும் மீதி கொடுக்க வேண்டிய மூவாயிரம் யூரோவுக்காக விடுவிக்க மறுத்து விடுகிறார்கள். ஓராண்டாகியும் விடவில்லை. கால தாமதமானால் அதற்கு வட்டியும் தரவேண்டும் என்ற நியந்தனை வேறு போடுகிறார்கள். 'இப்ப ஒரு வருடம் ஆச்சு... தம்பியனும் வரேல்லை... அந்த 3ஆயிரம் யூரோவும் குடுபடலேல்லை... அவங்கடை திட்டும் முடியேல்லை... தான் பிணை நிண்டதுக்கு தான் கடனைப் பொறுக்க ஏலாதாம்... இனியும் காலம் கடத்தினால் வட்டி வேறு தரவேணுமாம்... நாங்கள் என்ன செய்யுறது. அரசாங்கத்தன்ரை பிச்சைக்காசிலை இருந்துகொண்டு பிள்ளையையும் நாட்டுக்குக் குடுத்துப் போட்டு இருக்கிறம்' (பக்-22) எனக் கோபியின் பெற்றோரின் நிலையை அறிகிறார்கள். அப்பொழுது,

'யாரும் எதிர்பார்த்திராத வகையில்....

'நான் தாறன் அங்கிள்!'

என்று ரேணுகா சொல்ல எல்லோரும் வாயடைத்துப் போகிறார்கள். ரேணுகாவின் இந்த முடிவுக்கும் அவளது பெற்றோர் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்காதது மட்டுமல்ல, 'அவள் என் பிள்ளைதான்' என என் மனம் பெருமைப்பட்டது' என ரேணுகாவின் தந்தை பெருமைப்படுவது அவரது உயர்ந்த குணத்தைக் காட்டுகிறது (Jeevakumaaran, 2018).

## எதிர்ப்புக்குரிய காதல்

காதலை ஏதோ சில காரணங்களுக்காக சிலர் எதிர்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த எதிர்ப்பு பெற்ற பிள்ளைகளையே கொல்லும் அளவுக்கு முரட்டுத்தனமான, மூர்க்கத்தனமான, முட்டாள்தனமான துணிவைத் தருகிறது.

'விடியல்' என்னும் கதையில் 'சென்ற வருடம் அம்மன் கோயில் குருக்களின் மகள் சுருதி மருந்து குடித்துத் தேர் முட்டியடியில் இறந்து போனதும்... முஸ்தபா வாப்பாவின் மகனை யாரோ இருட்டில் அடித்துக் கொலை செய்ததும் இதே காதலுக்காகத் தான்' (பக்-114) என கூறப்படுவதில் சுருதி இறந்து போனது தற்கொலையா? கொலையா? ஐயம் எழுகிறது. மருந்து குடித்து இறந்து போகக் காரணம் காதலுக்கான எதிர்ப்பைத் தவிர வேறொன்றும் இருக்க வாய்ப்பில்லை. வெறும் எதிர்ப்பு என்பதைத் தாண்டி தற்கொலைக்குத் தூண்டுவதும் காரணமாக இருக்கிறது. முஸ்தபாவின் மகன் அடித்துக் கொலை செய்யப்படுகிறான்.

இந்தக் காதல் எதிர்ப்பினால் காதலர்கள் ஆண்டுகள் பலவானாலும் ஒன்றுசேர முடியாத நிலை இருப்பதை, 'நாங்கள் இன்னும் ஐந்தாறு வருடங்கள் காத்திருந்தாலும் சரி... ஐம்பது அறுபது வருடங்கள் காத்திருந்தாலும் சரி உங்கள் வீட்டிலும் எங்கள் வீட்டிலும் இதற்கு சம்மதிக்க மாட்டினம்' என்பதாக இருக்கிறது (Jeevakumaaran, 2018).

டென்மார்க், இலங்கை போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் மற்றும் இந்தியர்களிடையேயும் சாதி உணர்வு தொடர்வதையும் காணமுடிகிறது. சாதியை மீறி ஒன்று கலப்பதையும் காணமுடிகிறது. காதல் எதிர்ப்புக்கு சாதியும் மதமும் காரணமாக விளங்குகிறது. 'சமயம் வேறை என்றாலும்... சாதி வேறை என்றாலும் நாங்க படிச்சிருந்தால் எல்லாரும் கண்ணை மூடிக்கொள்ளுவினம்' என சாதி மதம் வேறாக இருந்தாலும் படித்திருந்தால் போதும் காதலர்களை ஏற்றுக்கொள்ளும் நிலை இருப்பதையும் காணமுடிகிறது. படிப்பு என்னும் தகுதி இல்லை என்றால் 'ஒன்றில் நாங்கள் காதலிக்கிறதை நிற்பாட்ட வேணும், இல்லாவிட்டால் வீட்டை விட்டு ஓடிப்போக வேணும்' என்னும் நிலை இருப்பதையும் காணமுடிகிறது (Jeevakumaaran, 2018).

## ஏமாற்றத்திற்குரிய காதல்

சில காதலர்கள் பெற்றோர் சம்மதமின்மையால் திருமணம் செய்துகொள்ளாமல் பிரிந்து விடுகிறார்கள். சில காதலர்கள் ஏதாவது சில காரணங்களால் தாங்களாகவே பிரிந்துவிடுகிறார்கள். இது ஒருவகையில் ஏமாற்றத்திற்குரிய காதாலாக இருக்கிறது. 'என்றும் அன்புடன்' என்னும் கதையில் வரும் சுமி என்பவளை வங்கியில் வேலை பார்க்கும் ஒருவன் உயிருக்குயிராகக் காதலிக்கிறான். அவளும் அப்படித்தான் காதலிக்கிறாள். ஆனால் சுமி தனது காதலை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்கிறாள். இருவரும் நெருங்கிப் பழகுகின்றனர். திடீரென்று ஒருநாள் சுமி கொழும்பு நகருக்குப் பணிமாற்றம் பெற்றுக் கொண்டு அவனிடம்கூடக் கூறாமல் சென்று விடுகிறாள். அவன் மிகுந்த ஏமாற்றத்திற்கு உரியவனாகிறான். பிறகு மனதைத் தேற்றிக்கொண்டு வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு வாழ்ந்து வரும் சூழலில் ஒருநாள் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் சுமி ஏன் தன்னை வேறு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு வாழச்சொன்னாள் என்பது அவனுக்குப் புரிகிறது.

தொலைக்காட்சியில் அரவாணிகளுக்கான கலந்துரையாடல் நிகழ்வு வருகிறது. 'அதில் ஒரு பெண் சொன்னாள், 'எங்களுக்கும் காதல் வரும். ஆனால் நாங்கள் திருமணம் செய்துகொள்ள மாடடோம். அந்த ஆண்கள் பாவம். அவர்களுடன் ஜாலியாக சுற்றியெல்லாம் திரிவோம். பெற்றார், உற்றார்-சகோதரர்களால் புறம் தள்ளப்பட்ட எங்களில் ஒருவர் உயிராக அன்பு செலுத்துகிறார் என்பது எங்களை மகிழ்ச்சியின் உச்சிக்கே கொண்டுபோய் வைத்துக் கொள்ளும். பிரச்சினை வருவது அவர்கள் கல்யாணப் பேச்சு எடுக்கும்பொழுதுதான். அச்சமயம் மனதைக் கல்லாக்கிக் கொண்டு அவர்களை வேறு கல்யாணம் செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்தி கல்யாணம் செய்து வைத்து விடுவோம். சிலவேளை உண்மையைச் சொல்லி விடுவோம். சிலவேளை சொல்வதில்லை. அப்போது கேட்பது ஒன்றுதான், 'உங்கள் பிள்ளைகளைக் கொண்டு அன்றி... அது... இது...' என்று அழைக்கச் சொல்லாமல் 'அம்மா' என்று ஒருதரம் அழைக்கச் சொல்லுங்கள் என்று' என்று அப்பெண் சொல்லும்போதுதான் சுமியும் இவ்வாறு சொன்னதை நினைத்துப் பார்த்துக் கண்ணீர் வடிக்கிறான். இவர்களது காதல் ஏமாற்றத்திற்குரியதாய் இருப்பதைக் காணமுடிகிறது (Jeevakumaaran, 2018).

## என்றுமுள காதல்

'சண்டியனும் சண்டிக் குதிரையும்' என்னும் கதையில் வரும் தம்பதியர் இருவரும் ஐந்து ஆண்டு காதல் புரிந்து திருமணம் செய்துகொண்டவர்கள். பத்து ஆண்டுகள் இல்லற வாழ்வு. குழந்தை இல்லை என்கின்ற குறையைத் தவிர இருவருக்குமான காதலுக்கும் அன்புக்கும் குறைவே இல்லை என்று சொல்லுமளவுக்கு வாழந்து வந்த சூழலில் புற்றுநோய் என்ற புயல் தாக்கியதில் மனைவி இறந்து போய்விடுகிறாள். இறக்கும் பொழுது வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளும்படியாக மனைவி சொல்கிறாள். 'நான் செத்த பிறகு எனக்குத் துரோகம் செய்கிறன் அது இது என்றில்லாமல் நீங்கள் யாரைவது கட்டி நல்லாய் இருங்கள்...' என்று கூறுமிடத்தில் மிகவும் உருக்கமான காதல் வெளிப்படுகிறது (Jeevakumaaran, 2018).

இறப்பதற்கு முன் மனைவி சொல்கிறாள், 'அவள் அமைதியகச் சொன்னாள், 'இது நான் உங்களைப் பார்த்துக் கொண்டு உங்களோடை இறுதிவரை இருக்கப்போற தருணங்கள்... நிறைய ஆக்கள் வந்து சுற்றி நின்று அழுது கொண்டு இருந்தால் உங்களோடை நான் தனிமையிலை இருக்கிற தருணங்கள் இல்லாமல் போய் விடும்' என்றும், மனைவி இறந்த பொழுதில் கனவன் கூறுவது, 'வேண்டாம்! இந்த ஆறு மணித்தியாலங்களும் அவளும் நானும் தனித்திருக்க வேணும். யாராவது விசிட்டேர்ஸ் வந்தாலும் இன்று பார்க்கேலாது என்று சொல்லி விடுங்கள்' என்னும் இடங்களில் காதல் கண்ணீர் விடுகிறது (Jeevakumaaran, 2018).

சுற்றியிருந்த உறவுகள் இரண்டாம் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தினாலும் அவன் மறுத்துவிடுகிறான். இறந்துபோன மனைவி கனவனோடு பேசுவதாக வரும் நினைவில், 'நீ கள்ளன்! யாரையும் கூட்டி வந்துவிடுவாய் என்றுதான் நானும் நினைச்சனான்... நீ அநியாயத்துக்கு நல்லவனாய் இருக்கிறாய்' (பக் 41) என்று மனைவி கூறுவதாக வரும் காட்சியிலிருந்து அவர்களது காதல் என்றுமுள்ள இறவாக் காதலாக வாழ்கிறது. காதலை மிக உருக்கமாக உணர்த்தி, நெஞ்சைக் கணக்கச் செய்து விடுகிறது கதை.

## முடிவுரை

காதல் என்பது ஏதாவது ஒரு வகையில் ஈர்க்கத்தான் செய்கிறது. ஒரு சிலரால் எதிர்க்கவும் செய்யப்படுகிறது. காதலின் உண்மையான உணர்வைப் புரிந்து உணர்வானார்களானால் உறுதியாக தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வார்கள். காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் சிலர் பின்னாளில் பிரிந்து விடுவதாகவோ, மணமுறிவு பெற்றுக்கொள்வதாகவோ குற்றச்சாட்டை வைக்கின்றனர். இதற்குக் காரணம் காதலல்ல பெற்றோர் மற்றும் சமூகத்தில் சிலர் ஆதரிக்காததுதான். சமூகத்தில் சிலர் எதிர்த்தாலும் பெற்றோர் ஆதரித்து அரவனைத்தால் காதலர்கள் வாழ்வார்கள். ஜீவகுமாரன் குறிப்பிடும் காதலர்கள் பெரும்பாலும் புலம்பெயர் நாட்டுத் தமிழர்கள்தான் இந்நாடுகளில் காதலுக்கு சிறிய அளவே எதிர்ப்பு இருப்பதைக் காணமுடிகிறது.

## References

Jeevakumaaran, V. (2014) Kadavuseettu, Natrinai Pathippagam, Chennai, India

Jeevakumaran, V. (2018) Nirvana Manithargal, Bharathi Puthagalayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License